தஞ்சை ஜில்லாவில் பூமிக்கடியில் இருக்கக் கூடிய தண்ணீரை முறையாகப் பயன்படுத்த வேண்டுமென்பதற்காக இந்த வருஷம் மார்ச் ஏப்ரல் மாதத்திற்குள் இரண்டாயிரம், மூவாயிரம் கிணறுகள் தோண்டி பம்ப் செட் வைக்கத் திட்டம் உருவாகி இருப்பதோடு வேலைகள் துரிதமாக நடந்து வருகின்றன.

திரு. கே. ஏ. மதியழகன்: அமெரிக்கக் குழுவினர் சிபாரிசில் 'இரண்டு லட்சம் ஏக்கர் நிலம் புதியதாகப் பாசன வசதி செய்ய முடியும்' என்ற பரிந்துரை இருக்கிறதா என்று நான் கேட்டேன். அது இருக்கிறதா இல்லையா என்று அமைச்சர் அவர்கள் சொல்ல வில்லை. அருள்கூர்ந்து அமைச்சர் அவர்கள் அதைக் கூறுவார் களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: நான் கொஞ்சம் அதிகமாகச் சொல்லி விட்டேன். அந்த ரிப்போர்ட் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அந்த அறிக்கையை இந்தச் சபை முன் வைக்க நடவடிக்கை எடுப்பார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: பரிசீலனை முடிந்து, பிறகு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி அரசாங்கம் முடிவு செய்யும்.

தண்ணீர் தண்டத்தீர்வை

* 71 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் தண்ணீர் தண்டத்தீர்வை இருவேறு விகிதங்களாக விதிக்கப்படுவது உண்மையா?

(இ) 1373-ம் பசலியில் இருந்து தண்ணீர் தண்டத்தீர்வை யை ஒரே விகிதமாக குறைத்து விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) No.

Levy of kist

* 72. Q.—SRI A. RAGHAVA REDDI : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the principle followed in charging kist for raising a second crop in single crop wet lands in the Chingleput district;

(b) whether it is a fact that a different method has been adopted as far as the Penalurpet taluk of the Chingleput district is concerned; and

(c) whether as a result of this the ryots have been made to pay more than what they would have paid if no exception had been made in regard to the Penalurpet taluk?

22nd January 1965]

THE HON. SRI V. RAMAIAH : (a) The rules for the levy of charge for second crop on single crop wet lands are—

(i) when a wet crop is raised as a second crop, half the wet assessment is charged; and

(ii) when a dry crop is raised as a second crop, the appropriate water charge for dry crop, i.e., wet-dry/3 is charged.

(b) & (c) Yes. The District Revenue Officer, Chingleput, has been requested to take immediate action to revise the accounts of all the villages of Penalurpet sub-taluk for fasli 1373 adopting the correct charges leviable.

பால் உற்பத்தி

*73 கேள்வி—திரு. மு. கருணாநிதி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான திட்டம் ஏதேனும் மத்திய அரசு, இந்த மாநில அரசாங்கத்திற்கு அனுப்பி யுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது இம்மாநில அரசு எடுத்த நட வடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.

*74 கேள்வி—புலவர் கா. கோவிந்தன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாதவரம் பால் பண்ணையில் பசுக்கள் தரும் பால் அளவை அதாவது பசுக்களின் பால் தரு ஆற்றலை உயர்த்த எடுத்துக் கொண்டு இருக்கும் நடவடிக்கைகள் யாவை?

THE HON. SRI V. RAMAIAH : A paper[a] is placed on the Table of the House.

திரு. கே. ஏ. மதியழகன்: மாதவரம் பால் பண்ணையில் சமீபத்தில் பல பசுக்கள் இறந்து விட்டன என்பது உண்மையா? அதனால் பால் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா: ரின்டர்பெஸ்ட் டிஸீஸினால் பல பசுக்கள் மரணம் அடைந்திருக்கின்றன. பால் உற்பத்தி ஓரளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மற்ற முயற்சிகளை எல்லாம் அந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் எடுத்து அதிகமாக பால் வேறு இடங்களில் இருந்து கொண்டு வர என்னென்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: பால் பற்றாக்குறையினால் சென்னை நகர மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு விரிவாக என்ன நடவடிக்கைகள் அரசாங்கம் எடுக்கப் போகிறது என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

---

[a] Printed as Appendix on pages 469–470,